# CHAPTER – 35

# வானவியலை அடிகோலிய சங்க இலக்கியங்கள்

**முனைவர் பா. சித்ரா**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத் துறை, மேலூர், மதுரை

**முனைவர் மா. பாண்டிகனி**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத் துறை
அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம் – 8

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தான் தோன்றிய அச்சமுதாயத்தின் பண்பாட்டையும் நாகரிகத்தையும், பொருளாதாரத்தையும் அக்காலமக்களின் அறிவையும், பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும், எடுத்துரைக்கின்றன. அதே போன்று இலக்கியங்கள் பல விதமான அறிவியல் சிந்தனைகளை உள்ளடக்கியுள்ளன. அவற்றுள் வானவியல் பற்றிய கருத்துக்களும் சிந்தனைகளும் நம்மை வியக்கச் செய்கின்ற அறிவியலின் ஒரு பிரிவே வானவியல் இன்றைய வானவியல் வளர்ச்சிக்கு முன்னோடியாக சங்க கால இலக்கியங்கள் அடிப்படையாக இருந்தது என்றால் மிகையாகாது.

## சங்க இலக்கியங்கள்

தமிழிலக்கிய மரபில் தனிச் சிறப்புடன் திகழ்வது சங்க இலக்கியமாகும், இதில் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் காலத்தின் மிக பழமையானவை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ். மக்களின் சமூகப் பின்னணியையும், வாழ்க்கை நெறிமுறையையும் சங்க இலக்கியத்தின் தலையான சிறப்பு, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை,நெய்தல் என்னும் ஐவகை நிலப்பிரிவுகளும் குறிபிடத்தக்கது. மேலும், விண்கோள்களையும் அவற்றின் நிலை மாற்றங்களையும், பருவ மாற்றங்களையும் கண்டறிந்தும், அவற்றை வேளாண்மை, வாணிபம், கைத்தொழில்ஆகியவற்றிற்கு பயன்படுத்தினர். முற்கால மக்கள் வானத்தையே விட்டின் மேற் கூரையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். வானில் நாள்தோறும் நிலவும் நிகழ்வுகளையும், மாற்றங்களையும் கூர்ந்து கவனித்து வானியல் சிந்தனைகளை நமக்கு எடுத்தியம்பியுள்ளனர் .இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

## அகநானூறு

எட்டுத் தொகை நூல்களுல் ஒன்று அகநானூறு. இதில் ஆகாயம், சந்திர உரோகினி, திருக்கார்த்திகை என விண்வெளி அறிவியல் பற்றி கூறப்படுகின்றன

"அம்ம வாழி, தோழி, கைம்மிகக் மழைகால் நீங்கிய மாக விசும்பில் குறுமுயல் மறுநிறம் கிரை மதி நிறைந்து அறுமீன் சேறும் அகல் இரு நடு நாள் மறு குவிளக் குறுத்து, மாலை தூக்கிப் பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவு உடன் அயர், வருகதில் அம்மா 141 (பாலை)

சந்திரனும் கார்த்திகை நட்சத்திரமும் அண்மித்திருக்கும் நாளைத் திருக்கார்த்திகை நாள் என்று கொண்டாடினர்.

**நற்றிணை**

ஞாயிறு பற்றி மிக அழகாக எடுத்துரைகின்றது.

"வானம் முழ்கிய வயங்கொளி நெடுஞ்சுடர்க் கதிர் காய்ந்து எழுந்தகங் கனலி ஞாயிறு" (163)
பூமியிலுள்ள உயிர்கள் அனைத்தும் ஞாயிற்றின் கதிர்களால் உயிர் வாழ்கின்றன, என்பதையும், ஞாயிறு இருளைப் போக்க அதன் உடல்பகுதி. நெருப்பினால் எரிந்து கொண்டிருக்கிறது என்றும் அதைச் சுற்றிலும், ஒளிப்படலம் உள்ளது என்றும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. இன்று அறிஞர்கள் ஞாயிறு நெருப்புக் கோளமாக இருக்கிறது என்று ஏற்றுக்கொள்கிறார்கள்.

**புறநானாறு**

கடைச் சங்க கால நூல்களில் ஒன்றான புறநானூற்றில் ஐம்பெருங்பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று. வான் பற்றிய சங்கப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய பாடல் வரிகள்

**மண் திணித்த நிலனும் நிலம் ஏந்திய**

**விசும்பும் விசும்பு தைவரு வளியும்**

**வளித் தலை இய தீயும்,**

**தீமுரணிய நீரும், என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்.........." (2.1–6)**

மண் செறிந்த நிலமும், நிலத்திலிருந்து ஆகாயமும், காயத்திலிருந்து, காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும் உண்டாயின. என்று அறிவியல் பேசப்படுகிறது.

**திருமுருகாற்றுப்படை**

ஞாயிறின் சிறப்புப் பற்றி எடுத்துரைக்கப்படுகிறது. தமிழரின் பொங்கல் திருநாள் ஞாயிறை முதன்மைப்படுத்துவது ஈண்டு நோக்கத்தக்கது. உயிர்கள் மகிழ ஞாயிறு எழுகிறது என்பதை நக்கீரர் குறிப்பிடுகிறார்.

**உலக முவப்பு வலனேர்புதிரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டா அங்கு**
**ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி (1–3)** பரிபாடல்

முறையாக தோன்றும் ஊழிக் காலங்களை வெளிப்படுத்துகிறது.

**விசும்பில் ஊழுச் செல்லக் கருவளர் வானத்திசையில் தோன்றி**
**உருவறி வாரா ஒன்றன் ஊழியும் செந்தீச் சுடரிய ஊழியும் பனியொரு**
**தாபெயல் தலைஇய ஊழியும் அவையிற்**
**நுண்முற வெள்ள மூழ்கி ஆர்தருபு (2)**

**வானம் முதல் ஊழிக் காலத்திலும் காற்று இரண்டாம் ஊழிக் காலத்திலும் தீ மூன்றாம் ஊழிக் காலத்திலும் நீர் நான்காம் ஊழிக் காலத்திலும் நிலம் ஐந்தாம் ஊழிக் காலத்திலும்**

தோன்றியது என அறிவியல் உண்மையை எடுத்துரைக்கிறது.

**பதிற்று பத்து**

கடைச் சங்ககால எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் வான அறிவியல் பற்றி கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. சந்திரன், சூரியனைப்பற்றியும், ஐம்பூதங்களின் பேரறிஞர்கள் பற்றியும் மெட்டுர் கண்ணனார் குறிப்பிடுள்ளார்.

**நிலம், நீர், வளி, விசும்பு என்ற நான்கின் அளப்பு அறியையே**
**நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல் ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து**
**அனையை... 14. 1–4**

**(இரண்டாம் பத்து)**

நிலம், நீர் காற்று (வளி), வானம் (விசும்பு) ஆகிய நான்கினதும் விண்மீன்கள் (நாள்), கிரகங்கள் (கோள்), சந்திரன் (திங்கள்), சூரியன் (ஞாயிறு) பெருநெருப்பு (கண் அழகி)

**குடதிசை மாய்ந்து குணைமுதல் தோன்றிப்**
**பயிருள் அகற்றும் பயங்கெழு பண்பின் (22.33 – 4)**

பூமியை ஞாயிறும் சந்திரனும் சுற்றுவதாக நம்பினர். ஞாயிறு கிழக்கில் தோன்றி, மறைவதையும், பூமி ஓரிடத்தில் நிலையாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. **சிறுபாணாற்றுப்படை** கோள்கள் சூரியனை சுற்றுகின்றன என்பதைப் பற்றி குறிப்பிடுகின்றன.

**வானிற விசும்பின் கோண்மீன் சூழ்ந்த**
**விளகங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து (242 – 43)**

இன்றைய வானவியல் அறிஞர்கள் ஞாயிறை ஒன்பது கோள்கள் சுற்றுவதாக கண்டறிந்துள்ளார்கள். இது பற்றி சிறுபாணாற்று படைப்பாடல் மேற்கூறு வரிகள் எடுத்துக் கூறுகின்றன.

**ஐங்குறுநூறு**

**நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன் இருதாள் நிழல்கீழ் மூவகை**
**உலரும் முகிழ்த்தன, முறையே**

நீல நிற மேனியையும் தூய அணிகளையும் உடைய உமையவளைத் தன் உடலில் ஒரு பக்கமாகக் கொண்ட ஒப்பில்லாத சிவபெருமானின் இரண்டு திருவடிக் கீழ் மூன்று வகையான உலகங்களும், நிலைபெற்றுள்ளன. மூவுலகு மேல் ஒடு கீழ் விசை மண் பாதளம் ஆகும். தோன்றியது, பரம் பொருளிலிருந்து வானம் தோன்றியது, வானட்திலிருந்து காற்று, காற்றிலிருந்து தீ தோன்றியது, தீயிலிருந்து நீர் தோன்றியது, நீரிலிருந்து நிலம் தோன்றியது என்று கூறலாம்.

**முடிவுரை**

சங்க கால இலக்கியங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றில் எவ்வாறு வானியல் அறிவியல் பேசப்பட்டுள்ளது என்பது பற்றி புறநானூறு, அகநானூறு, பரிபாடல், ஐங்குறுநூறு, பதிற்றுப்பட்டு ஆகியவற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தனி இலக்கியங்களை விட அறிவியல் சார்ந்த இலக்கியத்தின் வாழ்நாள் மிக நீண்டதென்று தெளிவாகிறது.

**மேற்பார்வை நூல்கள் :**


- முனைவர் கு. வே. பாலசுப்பிரமணியன், முனைவர் அ. மா. பரிமானம், பதினொன்கீழ்கணக்கு நூல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ப.22
- முனைவர் அ மா, பரிமானம், முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன், பதினொன்கீழ்கணக்கு நூல். நியூ செஞ்சுரி, சென்னை ப. எண் 428.
- முனனவர் கு. வெ. பாலசுப்ரமணியன், சங்க இலக்கியம், நற்றிணை (2004). நியூ செஞ்சுரி பப்ளிகேசன்ஸ், சென்னை 98.
- முனைவர் அ. மா பரிமளாம், முனைவர் வெ. பாலசுப்ரமணியன், சங்க இலக்கியம், புறநானூறு. நியூ செஞ்சுரி பப்ளிகேசன்ஸ் ப. எண்3 சங்க இலக்கியம் பரிபாடல் அ.மா. பரிமணம் கு. வெ. பாலசுப்ரமணியம் நற்றிணை (2004) நியூ செஞ்சுரி, சென்னை 98. ப.23 சங்க இலக்கியம் பதிற்றுப் பத்து (2004) அ. மா. பரிமாணம் நியூ செஞ்சுரி, சென்னை 98. ப. 16.
- சங்க இலக்கியம் பதிற்றுப் பத்து (2004) அ. மா. பரிமாணம் நியூ செஞ்சுரி, சென்னை 98. ப. 56–57.
- முனைவர் அ. ம. பரிமாணம். சங்க இலக்கியம் ஐங்குறுநூறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ப, எண். 22